பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

14 07 2025 6 30

திங்கட்கிழமை மாலை

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து இந்தியாவின் சுபான்சு சுக்லா உட்பட 4 பேர் இன்று டிராகன் விண்கலம் மூலம் பூமிக்கு புறப்பட்டனர்.

- ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக மத்திய அரசு வழங்கும் நிதியை திமுக அரசு முழுமையாக பயன்படுத்தவில்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

- தமிழக அரசின் செய்தித் தொடர்பாளர்களாக 4 ஐ ஏ எஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தமிழகத்தில் பள்ளி குழந்தைகளை தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்துவது தொடர் கதையாகி வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- 16 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து இந்தியாவின் சுபான்சு சுக்லா உட்பட 4 பேர் இன்று டிராகன் விண்கலம் மூலம் பூமிக்கு புறப்பட்டனர்.

இந்திய நேரப்படி மாலை 4.35 மணியளவில் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து டிராகன் விண்கலம் பிரிந்து பூமிக்கான பயணத்தை தொடங்கியது.

(சவுண்ட் பைட் - 36 செகண்ட்ஸ்)

நாளை பிற்பகல் 3 மணியளவில் அவர்கள் அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்பகுதிக்கு வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுபான்சு பூமிக்கு திரும்புவதை நாடே ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

>><><><><<

ஊரகப் பகுதி மேம்பாட்டுக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு பெம்மசானி சந்திரசேகர் கூறியிருக்கிறார்.

இன்று புதுதில்லியில் ஊரக மேம்பாட்டுத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ஊரகப் பகுதிகள் இதுவரை இல்லாத அளவுக்கு வளர்ச்சிக் கண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த கிராமங்களே, வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான அடித்தளம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊரகப் பகுதியில் வேலைவாய்ப்பின்மையை களைவதில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு பெம்மசானி சந்திரசேகர் கூறினார்.

>><><><><<

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக மத்திய அரசு வழங்கும் நிதியை திமுக அரசு முழுமையாக பயன்படுத்தவில்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வருடந்தோறும் பெரும்பாலான நிதியை மாநில அரசு திருப்பி அனுப்புவதாக குறை கூறியுள்ளார்.

திமுக அரசின் விளம்பரங்களுக்காகவும் இந்த நிதி தவறாக பயன்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியின மாணவர் விடுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கென சிறப்பு குழுவினை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்த விடுதிகளில் 99 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண திமுக அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

>><><><<

தமிழக அரசின் செய்தித் தொடர்பாளர்களாக இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் திரு ராதாகிருஷ்ணன், திரு ககன் தீப் சிங் பேடி, திரு தீரஜ்குமார், திருமதி அமுதா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாநில அரசின் திட்டங்கள் மற்றும் தகவல்களை விரைவாகவும், உரிய நேரத்திலும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த 4 அதிகாரிகளுக்கும் பல்வேறு துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த துறைகள் சார்ந்த செய்திகளை அவர்கள் மக்களுக்கு வழங்குவார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><<

தமிழகத்தில் பள்ளி குழந்தைகளை தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்துவது தொடர் கதையாகி வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தொடக்க பள்ளியில் சின்னஞ்சிறு மாணவர்கள் கழிவறைகளை சுத்தம் செய்வது தொடர்பாக வெளியான காணொலி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு இந்த கொடுமைகள் தெரியவில்லையா என்று நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

>><><><<

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி தொடர்ந்து வலுவடைந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதைத் தெரிவித்த அவர், இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால் தமிழகத்திற்கு பாதிப்பு இல்லை என்றும், நீலகிரி மாவட்டத்தில் நாளை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 1 — 55 செகண்ட்ஸ்)

கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரைக் கண்ணன் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 2 – 34 செகண்ட்ஸ்)

>><><><<

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே காளைகள் விடும் விழா இன்று நடைபெற்றது.

400 – க்கும் மேற்பட்ட காளைகள் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரவிச்சந்திரன் - 36 செகண்ட்ஸ்)

>><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

வேலூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 94 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மகளிர் உரிமைத் தொகை பெற்று வருவதாக ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி கூறியுள்ளார்.

------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஸ்ரீஅழகிய நாதர் கல்யாண சுந்தரேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

-----------

நெல்லை மாவட்டம் காரையாறு சொரிமுத்து அய்யனார் கோயிலில் ஆடி அமாவாசை திருவிழா இன்று தொடங்கியது.

-----------

கன்னியாகுமரி மாவட்டம் காட்டுப்புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு மாணவர்களின் கற்றல் திறன் குறித்து ஆட்சியர் திருமதி அழகு மீனா இன்று மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

>><><><<

விளையாட்டுச் செய்திகள்

16 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா 25-18, 26-24, 25-15 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவை வென்றது.

------------

மலேசிய ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Alia Kankaria வெண்கலப் பதக்கம் வென்றார்.

11 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் அவர், 13-11, 10-12, 10-12, 13-11, 11-8 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Tang Ching -ஐ வென்றார்.

-------------

உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் Koneru Humpy மற்றும் திவ்யா தேஷ்முக் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 3 ஆவது சுற்று ஆட்டங்களில் Koneru Humpy – செர்பியாவின் Teodora Injac-ம், திவ்யா தேஷ்முக் - போலந்தின் Klaudia Kulon -ம் வென்றனர்.

------------

இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியின் நீளம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் Ancy Sojan வெண்கலப் பதக்கம் வென்றார்.

------------

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 193 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை ஆடிவரும் இந்தியா சற்றுமுன் வரை 8 விக்கெட் இழப்புக்கு 124 ரன் எடுத்துள்ளது.

>> End of News <<